செய்தி வெளியீடு எண்: 573 நாள்:06.08.2020

**<u>இன்று (6.8.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

அனைவருக்கும் வணக்கம்.

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் நோய் தொற்று இந்தியாவிலும், தமிழகத்திலும் பரவியுள்ளது. மதுரை மாவட்டத்தில் முதலில் குறைவாக இருந்தது. ஆனால், படிப்படியாக உயர்ந்து, மாவட்ட நிர்வாகம் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக தற்போது கட்டுப்பாட்டிற்குள் உள்ளது.

உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, ICMR மற்றும் மருத்துவ நிபுணர்கள் அளிக்கின்ற ஆலோசனைகளின் அடிப்படையில் அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று படிப்படியாகக் குறையத் தொடங்கியிருக்கிறது. மதுரை மாவட்டத்தில் சற்று அதிகமாக இருந்ததை குறைப்பதற்கு சுகாதாரத்துறை, உள்ளாட்சி துறை மூலம் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக தற்போது குறைந்துள்ளது. மதுரை மாவட்டத்தில் நாள் ஒன்றிற்கு 124 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநகராட்சிப் பகுதிகளில் மட்டும் இதுவரை சுமார் 4,000 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன, புறநகரில் சுமார் 8,000 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டிருகின்றன. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை நாளொன்றுக்கு 400–ஆக இருந்தது படிப்படியாகக் குறைந்து, தற்பொழுது 200க்கும் கீழ் உள்ளது. மதுரை மாநகரில் 35 கட்டுப்பாட்டுப் பகுதிகள், புறநகரில் 49 கட்டுப்பாட்டுப் பகுதிகள், என மொத்தம் 84 பகுதிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டு தடுப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நோய் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வந்தாலும், பொதுமக்களின் முழு ஒத்துழைப்பு மிக, மிக அவசியம். பொதுமக்களுடைய ஒத்துழைப்பிற்கேற்ப இந்த நோயின் தாக்கம் குறையும், நோய் பரவாமல் தடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும். கொரோனா வைரஸ் நோய் அறிகுறி

தென்பட்டவுடன், உடனடியாக மருத்துவமனைக்கு சென்று, பரிசோதனை செய்து, பாசிட்டிவ் என்றால், மருத்துவர்கள் உரிய சிகிச்சை அளித்து குணமடையச் செய்வார்கள். பாதிக்கப்பட்டவர்களை கண்டறிய நியமிக்கப்பட்ட அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று, வீட்டிலுள்ளவர்களுக்கு காய்ச்சல், சளி, தொண்டை வலி, இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தி சிகிச்சை அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் இப்பணிகளை தொடர்ந்து மேற்கொண்ட காரணத்தினால்தான் மதுரை மாநகரத்திலும், புறநகர்ப் பகுதிகளும் இத்தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கான அரசு மருத்துவமனைகளின் எண்ணிக்கை 3. இங்கு 1,518 படுக்கைகளும், தனியார் மருத்துவமனைகளில் 1,124 படுக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசின் சார்பாக 1,150 படுக்கை வசதிகளுடன் கூடிய கோவிட் கேர் சென்டர் மூன்றும், தனியார் சார்பாக 520 படுக்கை வசதிகளுடன் கூடிய கோவிட் கேர் சென்டர் ஒன்றும் உள்ளது. மேலும், தயார் நிலையில் தேர்வு செய்யப்பட்ட அரசு மருத்துவமனைகளில் இருக்கின்ற படுக்கை வசதிகள் 419. கோவிட் கேர் சென்டர் தயார் நிலையில் தேர்வு செய்யப்பட்டு வைக்கப்பட்ட படுக்கை வசதிகள் 900. தனியார் கோவிட் கேர் சென்டரில் 1,490. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உரிய சிகிச்சை அளிக்க போதிய படுக்கை வசதிகள் சுகாதாரத்துறை மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மதுரை மாநகரைப் பொறுத்தவரை, நேற்றைய நிலவரப்படி, பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 11,593. குணமடைந்து வீடு திரும்பியவர்கள் எண்ணிக்கை 9,219. இறந்தவர்கள் எண்ணிக்கை 264. தற்போது சிகிச்சை பெற்று வருபவர்கள் எண்ணிக்கை 2,107. மதுரை மாவட்டத்தில் 5.8.2020 வரை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் 1,63,492 நபர்கள்.

மதுரை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் 350 படுக்கை வசதிகளுடன் பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம் தென் மாவட்டங்களின் தலைநகரமாக விளங்கி கொண்டிருக்கிறது. அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் இருக்கின்ற மக்களுக்கும், மதுரை மாவட்ட மக்களுக்கும் உயர்தர சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் எய்ம்ஸ்

மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று விரும்பினார்கள். மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் நேரடியாக வந்து எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அந்தப் பணிகளும் விரைவில் தொடங்கவுள்ளது. ஜப்பான் பன்னாட்டு வங்கியிடம் நிதி உதவி கோரப்பட்டுள்ளது இதற்கான ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகி, நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற செய்தி மத்திய அரசிடமிருந்து கிடைக்கப் பெற்றிருக்கிறது.

கேன்சரால் பாதிக்கப்பட்ட ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைகளில் அதிகக் கட்டணத்தில் சிகிச்சை பெற இயலாத காரணத்தால், குறைந்த கட்டணத்தில் உரிய சிகிச்சை அளிப்பதற்கு மதுரை அரசு மருத்துவமனையில் ரூபாய் 20 கோடியில் உபகரணங்கள், ரூபாய் 5 கோடியில் கட்டடம், என மொத்தம் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் புற்றுநோய் சிகிச்சை கட்டுப்படுத்தும் மையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் 20 நாட்களில் அந்தப் பணி நிறைவு பெறும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, மக்களின் அரசு என்பதற்கேற்ப, சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம் உருவாக்கப்படும் என அறிவித்தேன். அதன்படி, மதுரை மாவட்டத்தில் 21,600 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 12,360 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதில், 5,906 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது, 1,652 நபர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல, புதிய வட்டம் தோற்றுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, 2018–ஆம் ஆண்டு கள்ளிக்குடியில் புதிய வட்டம் தோற்றுவிக்கப்பட்டது. திருமங்கலம் பகுதியில் வருவாய் கோட்டம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அம்மா அரசு 2019–ஆம் ஆண்டு நிறைவேற்றியிருக்கிறது. நூறு நாள் வேலைத் திட்டமும் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில் 10,956 சுயஉதவிக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இக்குழுக்களுக்கு சுமார் 150 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டு இருக்கிறது. உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் 9,329 மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகனம் வழங்கப்பட்டிருக்கிறது. மேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 784 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. வைகை அணையை ஆதாரமாகக்கொண்டு, உசிலம்பட்டி நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூபாய் 73 கோடி மதிப்பீட்டிலும், சோழவந்தான் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

ரூபாய் 5.53 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. பெரியார் பேருந்து நிலையத்தை மேம்படுத்த ரூபாய் 167 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. பழச் சந்தைகளை மேம்படுத்த ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. புராதனச் சின்னங்களை புனரமைக்க ரூபாய் 42.65 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. நான்கு மாசி வீதி சிறப்புச் சாலை அமைக்கப்பட்டு, சீரான குடிநீர் வழங்க ரூபாய் 53.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதுரையில் பல்லடுக்கு வாகன நிறுத்தம் அமைக்க ரூபாய் 41.96 கோடி, வைகை ஆற்றினை மேம்படுத்த ரூபாய் 84 கோடி, தமுக்கம் மைதானத்தில் கலாச்சார மையம் அமைக்க ரூபாய் 47.7 கோடி, பாதாளச் சாக்கடை ஏற்படுத்துவதற்கு ரூபாய் 275.8 கோடி, திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு ரூபாய் 25.22 கோடி, தெருவிளக்குகள் அமைப்பதற்கு ரூபாய் 30.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு லோயர் கேம்ப் பகுதியிலிருந்து மதுரை மாநகரின் 100 வார்டு பகுதிகளுக்கும் ரூபாய் 1,250 கோடி மதிப்பீட்டில் இரும்புக் குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நியாய விலைக் கடைகளின் மூலம் ஏற்கனவே அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் அம்மாவின் அரசால் விலையில்லா அரிசி, சர்க்கரை, எண்ணெய், பருப்பு மற்றும் 1000 ரூபாய் வழங்கப்பட்டது. மதுரை மாநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள சில பகுதிகளுக்கு மீண்டும் ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. இந்தப் பகுதிலுள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு மீண்டும் தலா 1000 ரூபாய் வழங்கப்பட்டது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் விலையில்லா அரிசி, பருப்பு, எண்ணெய் மற்றும் 2000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கும் விலையில்லா அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன. இப்படி வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்கின்ற திட்டங்களையெல்லாம் அம்மாவின் அரசு நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை கோ. புதூர் தொழிற்பேட்டை, கப்பலூர் தொழிற்பேட்டை மற்றும் கப்பலூர் மகளிர் தொழிற்பேட்டை என மூன்று தொழிற்பேட்டைகளில் 535 தொழிற்கூடங்கள் இயங்கி வருகின்றன. அங்கு 20,000 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மாண்புமிகு

அம்மாவின் அரசின் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம், 500 கோடி ரூபாய் முதலீட்டில் TAFE நிறுவனம் டிராக்டர் உற்பத்தியை துவங்கியுள்ளது. எச்.சி.எல் நிறுவனம் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் மென்பொருள் உற்பத்தி நிறுவனத்தை துவங்கியுள்ளது. Penguin Apparels நிறுவனம் 12 கோடி ரூபாய் முதலீட்டில் ரெடிமேட் கார்மெண்ட்ஸ் உற்பத்தியை துவங்கியுள்ளது. Chainsys Software Exports Pvt. Ltd., நிறுவனம் 34 கோடி ரூபாய் முதலீட்டில் மென்பொருள் உற்பத்தியைத் துவங்கியுள்ளது.

அவசரகால கூடுதல் கடன் திட்டத்தின் கீழ் 153.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10,951 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. 73 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு Covid நிவாரணமாக 7.45 கோடி ரூபாய் கடன் ஒப்புதல் வழங்கப்பட்டு இருக்கின்றன. மேலும், 356.46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கே.புதூர் தொழிற்பேட்டையில் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்படி படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் விதமாகவும், பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காகவும் இதுபோன்று பல தொழிற்சாலைகளை துவங்கி, ஆயிரக்கணக்கானவர்கள் பணிபுரிகின்ற சூழ்நிலையை அம்மாவின் அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்தில், பல்வேறு தடுப்பணைகள் அறிவிக்கப்பட்டு பல திட்டங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன, இன்னும் பல திட்டங்கள் துவங்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. அனைத்து திட்டங்களும் நிறைவேறுகின்றபொழுது, பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமிக்கப்பட்டு, கோடை காலத்தில் அனைவருக்கும் தேவையான நீர் கிடைப்பதற்கு அரசு வழிவகை செய்திருக்கிறது.

அதேபோல், குடிமராமத்துத் திட்டம் என்ற அற்புதமான திட்டத்தின் மூலம், மதுரை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் உள்ள ஏரிகள், ஊரணிகள், குட்டைகள், குளங்களை தூர் வாரும் பணிகள் விவசாயிகளின் பங்களிப்போடு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மதுரை மாநகரம், கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம் கட்டுவதற்கு 164.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நில எடுப்புப் பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. அதேபோல நகரின் முக்கிய பகுதியில் 47.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மையத் தடுப்புகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து வாரணாசி – கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் உயர்த்தப்பட்ட நடைபாதை அமைக்கும் பணி 15(1) நோட்டீஸ் அரசின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. மதுரை விமான நிலைய சாலையை அகலப்படுத்துவதற்காக சீரமைக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. செல்லூர் ரயில்வே மேம்பாலம் முதல் திண்டுக்கல் சாலை வரை இணைக்கும் கூடுதல் சாலை அமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. வைகை ஆறு வடகரை பகுதி முதல் அண்ணா நகர் – விரகனூர் சுற்றுச் சாலை சந்திப்புகளை மேம்படுத்தும் பணி மற்றும் அணுகு சாலைகள் அமைத்தல், தடுப்பு சுவர் கட்டும் பணி மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணி 26.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இன்னும் பல மேம்பாலங்கள் கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மீனாட்சி மிஷன் மருத்துவமனையிலிருந்து கப்பலூர் வரையில் 217 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புறவழிச்சாலை அமைக்கும் பணி நிறைவு பெற்று, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. சோழவந்தான்–வளையப்பட்டி சாலை, பரவை–மதுரை–மேலக்கால் சாலையில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டும் பணி, துவரிமான் பக்கம் அணுகுசாலை அமைக்கும் பணி, பரவை பக்கம் அணுகுசாலை நில எடுப்புப்பணி முடிந்தவுடன், சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். இப்படி பல்வேறு சாலைப் பணிகளும், உயர்மட்டப் பாலங்களும் கட்டுவதற்கு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு, நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ் 43 கோடியே 44 லட்சம் ரூபாய் செலவில் நுண்ணுயிர் பாசன இணைப்பு 34,441 ஏக்கர் பரப்பில் நிறுவப்பட்டுள்ளது. நடப்பாண்டில், ரூபாய் 44 கோடியே 93 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல, உசிலம்பட்டி, திருமங்கலம்,

வாடிப்பட்டி மற்றும் மேலூர் விவசாயிகளின் நலனுக்காக, இந்தப் பகுதியிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் ரூபாய் 5 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளன. பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதித் திட்டத்தின் கீழ் இதுவரை 1,36,696 விவசாயிகளுக்கு 111 கோடி ரூபாய் அளவிற்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்கன் படைப்புழுவால் பாதிக்கப்பட்ட 11,312 மக்காச்சோள விவசாயிகளின் நலன் காக்கும் பொருட்டு, அம்மாவின் அரசால் நிவாரணமாக 7 கோடியே 12 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில், பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் மட்டும் 79,470 விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு, இதுவரை 35,200 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 60 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மல்லிகை விவசாயிகள் நலனுக்காக பாரம்பரிய மலர்களுக்கான மகத்துவ மையம் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மதுரையில் நிறுவப்பட உள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, 289 கோடி ரூபாய் செலவில் 573 ஏக்கர் நிலத்தில் துணைக்கோள் நகரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் 9,557 மனைகள், பள்ளிக்கூடம், பேருந்து நிலையம், சுகாதார மையம் மற்றும் சிறுவர் பூங்கா அமைப்பது போன்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, 427.22 கோடி ரூபாய் செலவில் 4,740 வீடுகள் கட்டுவதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. மதுரை மாவட்டத்தில் பூங்காநகர், ராஜாகூர், கருத்தபுளியம்பட்டி, ஆத்திக்குளம், கரடிக்கல், உச்சப்பட்டி தோப்பூர் மற்றும் மஞ்சள்மேடு ஆகிய பகுதிகளில் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. அம்மாவின் அரசு மக்களுடைய அரசு, அதனால் மக்களுடைய திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. எனவே, வேளாண் பணி, புதிய, புதிய தொழிற்சாலைகள் கொண்டு வருவது போன்றவற்றில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்ட அமைச்சர் பெருமக்கள் இருவரும் இரவு, பகல் பாராமல் கொரோனா தடுப்புப் பணியில் மாவட்ட நிர்வாகத்தோடு இணைந்து செயல்பட்டு

வருகின்றார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமானால், அம்மா கிச்சன் உருவாக்கப்பட்டு, சத்தான உணவுகள் தயாரிக்கப்பட்டு, மதுரை மாநகரில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு மூன்று வேளையும் உணவு வழங்கப்படுவது பெருமைக்குரியது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். முழுவதும் அவர்களுடைய சொந்தச் செலவில் இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்ட நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பல்வேறு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கான பணிகளை மேற்கொண்ட மாவட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா இருந்தபொழுது நம்முடைய நிர்வாகிகள் எப்படி வேகமாக, துரிதமாக மக்களுக்கு நன்மை செய்தார்களோ, அதேபோல, பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆட்சியில் ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்படும் போது, எந்தவித அறிவிப்பும் இல்லாமல் தானாக முன்வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கியமைக்கு அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இந்த கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அனைத்து அலுவலர்களுக்கும், நோய்ப் பரவல் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், பிற துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை அரசின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**